# ???? ????????? ?????????? ???? ?????????



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் மோதுவதற்கு முனையக்கூடாது. மாறாக இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு அரசு முன்வரவேண்டும். இலங்கைக்குள் ஜெனிவா கலாசாரத்தை மஹிந்த ராஜபக்சவே கட்டியெழுப்பினார் – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

” போர் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. பொதுச்செயலாளர் பான் -கீ -மூனுடன் இணைந்து மஹிந்த ராஜபக்ச கூட்டறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அதில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் உள்ளக விசாரணையை முன்னெடுப்பதற்கு ராஜபக்ச அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதன்காரணமாகவே இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் தலையிட்டது. மஹிந்த அன்று வழங்கிய இணக்கப்பாடுதான் இன்றளவிலும் இலங்கையின் கழுத்தை இறுக்கியுள்ளது.

அதுமட்டுமல்ல 1989 இல் மஹிந்த ராஜபக்சவே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஜெனிவா சென்றார். இலங்கையில் ஜெனிவாக் கலாச்சாரத்தை அவரே உருவாக்கினார். அவ்வாறு செய்துவிட்டு அழுது புலம்புவதில் பயன் இல்லை.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் மோதக்கூடாது. இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். செய்யக்கூடியவை எவை, செய்யமுடியாதவை எவை என்பதனை இராஜதந்திர ரீதியில் எடுத்துரைக்க வேண்டும். அதனைவிடுத்து மோதல் போக்கை கடைபிடிப்பது நெருக்கடியையே ஏற்படுத்தும்.

2015 இல் இலங்கைமீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், எமது அரசுதான் நாட்டை நெருக்கடியில் இருந்து பாதுகாத்தது. சர்வதேச விசாரணையில் இருந்து விடுதலை பெற்றோம். எமக்கும் நாடுமீது

பற்று உள்ளது.” -என்றார்.

---

# ???? ?????? 3???? ?????????? ???????????!



‘கொரோனா’ தொற்றால் உயிர் இழந்தவர்களின் உடல்களை இரணை தீவு பகுதியில் புதைப்பதற்கு எதிர்பு தெரிவித்து இரணை தீவு மக்கள் முன்னெடுத்து வருகின்ற போராட்டம் மூன்றாவது நாளாகவும் இன்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.

‘கொரோனா’ தொற்றால் உயிர் இழந்தவர்களின் உடல்களை இரணை தீவு பகுதியில் புதைப்பதற்கு எதிர்பு தெரிவித்து கடந்த புதன்கிழமை இரணை மாதா நகர் பகுதியில் மக்கள் மற்றும் பங்குத் தந்தையர்கள் இணைந்து போராட்டம் மேற்கொண்ட போதிலும் தொடர்சியாக இரணை தீவு பகுதியில் உடல்களை புதைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் இரணை தீவு பகுதியில் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இரணை தீவு பிரதான இறங்கு துறை மற்றும் உடல்களை அடக்கம் செய்வதற்கு குழிகள் தோண்டப்பட்ட இடம் ஆகியவற்றில் மக்கள் இன்றைய தினம் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சர் உட்பட பல தரப்பட்ட தரப்பினர்க்கு இரணை தீவு மக்களால் நேரடியாக சென்று எதிர்ப்பு மகஜர் வழங்கி வைக்கப்பட்ட போதிலும் இதுவரை சடலங்களை அடக்கம் செய்வதற்கான மாற்று இடம் தெரிவு செய்யப்படவோ அல்லது இரனை தீவு பகுதியிலே மேற்கொள்ளப்பட்டு வரும் சடலங்களை அடக்கம் செய்யும் பணிகளோ நிறுத்தப்படவில்லை என இரணை தீவு மக்கள் தெரிவித்தனர்.

# [illegible]



Appoint Permanent Rapporteur
UN sponsored referendum in the North and East of Sri Lanka
Hunger strike for Truth & Justice
உண்மைக்கும் நீதிக்குமான உணவு தவிர்ப்புப் போராட்டம்
Refer Sri Lanka to the International criminal court!
We still belie
United Kin


[illegible]




மாபெரும் இனப்படுகொலையை நிகழ்த்தியுள்ள இலங்கை அரசிற்கு மேலும் இன்னுமொரு கால அவகாசம் வழங்குவதை சர்வதேச நாடுகள் நிறுத்துவதோடு, இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து என்ற ஒட்டுமொத்த தமிழினத்தின் ஒற்றைக்குரலாய் பசித்திருந்து நீதிக்காய் போராடும் அம்பிகையின் அறப்போர் இன்றுடன் ஒரு வாரத்தை பூர்த்திசெய்கின்றது.

மனித நேயத்தின் உச்சம் நாங்களே என மார்தட்டிக்கொள்ளும் பிரித்தானிய அரசு அம்பிகையின் கோரிக்கைகளுக்கு தொடர்ந்தும் மௌனம் காத்து வருவது உலக நாடெங்கிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசிற்கு மேலும் கால அவகாசம் வழங்க சர்வதேசம் முனைந்துள்ளமையை எதிர்த்து, இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தக்கோரி நான்கு அம்சக்கோரிக்கைகளை பிரித்தானிய அரசிடம் முன்வைத்து திருமதி. அம்பிகை செல்வகுமாரினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அகிம்சை வழியிலான உணவு தவிர்ப்பு போராட்டம் இன்று 7 ஆவது நாளை (05.03.2021) எட்டியுள்ளது.


தனது கோரிக்கையை பிரித்தானிய அரசு நிறைவேற்றும் வரை உணவை உண்ண மறுத்துவரும் அம்பிகையின் உடல் நிலை மிகவும் சோர்வுற்று குரல் தளர்வடைந்துள்ள நிலையிலும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அகிம்சை வழியில் உயிர் தியாகிகளான திலீபன், அன்னை பூபதி ஆகியோரை வணங்கி அவர் இன்றைய நாளினை தொடர்ந்துள்ளார்.



தனது கோரிக்கைகளில் ஒன்றையாவது பிரித்தானிய அரசு நிறைவேற்ற வேண்டும் அதுவரை தனது போராட்டம் தொடரும் என தெரிவித்துள்ளதுடன் உலகெங்கிலுமுள்ள அனைத்து தமிழ் மக்களையும் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் கோரிக்கைகளை நிறைவேற்ற தத்தம் நாட்டு பிரதிநிதிகளுக்கு அழுத்தங்களை கொடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.


இதேவேளை நேற்றைய 6 ஆம் நாள் மெய்நிகர் (Zoom) நிகழ்வு தாயகத்திலிருந்து தவத்திரு வேலன் சுவாமிகள், அருட்தந்தை லியோ, மௌலவி ரிஸ்வி மற்றும் பிரித்தானிய ஆன்மீக பணியகத்திலிருந்து

அருட்தந்தை எல்மோ ஆகியோரின் ஆசிச்செய்திகளுடன் ஆரம்பமானது


தொடர்ந்து வணக்க நடனம் இடம்பெற்றதுடன் லோகன் கணபதி (Member of Provincial Parliament (MPP) for Markham-Thornhill, Canada, தமிழகத்திலிருந்து முன்னாள் தலைமை நீதியாளர் அரி பரந்தாமன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமார், பிரான்சிலிருந்து 'நமது FM' வானொலியின் இயக்குநர் குருபரன், தமிழகத்திலிருந்து இயக்குநர் திரு. கௌதமன், முன்னாள் போராளிகளான ஈழவன், திருமதி. ஆர்த்தி, கனடாவிலிருந்து தேசிய செயற்பாட்டாளரான கண்ணன் மற்றும் செயற்பாட்டாளர் ஈசன் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர்.


- 


- 
Recording
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave
- 
Recording
thiruchelvam luckeeswaran
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave

- 
Recording
UK! Do not betray Tamil victims of Genocide in Sri Lanka!
Hunger strike for Truth & Justice
thiruchelvam luckeeswaran
Velan Swamigal – Sivaguru Atheenam
Audio Settings
Chat
Raise Hand
Q&A
Leave
- 
UK! Do not betray Tamil victims of Genocide in Sri Lanka!
Recommend Referral to International Criminal Court (ICC)
Create an International Impartial and Independent Mechanism (IIIM)
Appoint Permanent Rapporteur
UN sponsored referendum in the North and East of Sri Lanka
Hunger strike for Truth & Justice

- 
- 
visuvanathan Rudrakumaran

- 
- 

- 

- 


இந்நிலையில் 6 ஆவது நாளாகிய இன்றைய மெய்நிகர் நிகழ்வு வழமை போல் பிரித்தானிய நேரம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் முன்னாள் நீதியரசரான பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான க.வி. விக்னேஸ்வரன், தமிழகத்திலிருந்து ஆய்வாளர் அய்யநாதன் மற்றும் தாயகத்திலிருந்து அரசியல்வாதிகள் என பலர் அம்பிகையின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

அதேவேளை உடல் சோர்வுற்ற நிலையிலும் திருமதி அம்பிகை செல்வகுமார் மக்களிற்கான தனது கோரிக்கை தொடர்பில் விசேட உரை நிழ்த்தவுள்ளார்.

மேற்படி மெய்நிகர் (Zoom) நிகழ்வில் நீங்களும் இணைந்து அம்பிகையின் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்க பின்வரும் இணைப்பில் இணைந்துகொள்ளலாம்.

https://us02web.zoom.us/j/86153063444?pwd=U1ZiY1lIVjRtZmNwZUFWNGNzV1k1UT09